# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

MCOP No.252/2019 Date: 14.11.2024.

PW1- செங்கோட்டுவேலு

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு மீண்டும் முன்னிலையானதின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி

நான் ஏற்கனவே 17.10.2024ல் எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். தற்போது எனது கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சான்றாவணங்கள் பட்டியலில் உள்ள வரிசை எண். 1 முதல் 2 வரையான ஆவணங்கள் முறையே ம.சா.ஆ.11 முதல் ம.சா.ஆ.12 (20-எண்ணிக்கைகள்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து சமயத்தில் என்னுடைய வயது, வேலை, வருமானம் ஆகியவற்றை மெய்ப்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற வாகனத்தின் உரிமையாளர் செந்தில்குமார் என்றால் சரிதான். எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. நான் எனது ஓட்டுநர் உரிமத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற வாகனத்திற்கு காப்பீடு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் நான் மயக்கமாக இருந்தேன். விபத்து சம்பந்தமாக போலீஸ் புகார் கொடுத்த கந்தசாமி எனக்கு மைத்துனர். அவர் விபத்தின் போது விபத்து நடந்த இடத்தில் இல்லை என்றால் சரிதான். அவர் விபத்து நடந்த பின்பு தான் அங்கு வந்தார். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லும் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டி சென்ற கபிலன் என்பவருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர்

எனக்கு நஷ்டஈடு செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. விபத்தின் போது எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாலும், தலைகவசம் அணியவில்லை என்பதாலும் இழப்பீடு தொகை கணக்கீடு செய்யும் போது இவற்றையும் கணக்கில் கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-செங்கோட்டுவேலு

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,

சார்பு நீதிபதி, சங்ககிரி.